வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ஓ.மு.எண்.3862/ஆ2/2025 நாள்: 12.08.2025

பொருள்: பள்ளிக் கல்வி–வேலூர் மாவட்டம்–01ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்புகளுக்கான விளையாட்டு மற்றும் உடற்கல்வி ஆசிரியர்களுக்கான வளநூல்கள்– https://new.tnschools.gov.in/ என்ற இணையளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளமை– உரிய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்தல்–சார்பு.

பார்வை: பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.036875/எம்2/இ2/2024 நாள்:29.07.2025

-----

பார்வையில் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதத்திற்கிணங்க 01 முதல் 12 ஆம் வகுப்புகளுக்கான விளையாட்டு மற்றும் உடற்கல்விக்கான கலைத்திட்டம் மற்றும் பாடம் திட்டம் தயாரிக்கப்பட்டு ஆசிரியர்களுக்கான வளநூல்கள் வல்லுநர் குழு அமைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட வளநூல்களின் மென் பிரதிகள் https://new.tnschools.gov.in/ என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனை அனைத்து பள்ளி தலைமையாசிரியர்கள் பதிவிறக்கம் செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்படுகிறது.

மேலும், மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி/இடைநிலை/தனியார் பள்ளிகள்) தங்கள் ஆளுகையின்கீழ் செயல்படும் பள்ளிகளில் உடற்கல்வி ஆசிரியர் வளநூல்கள் பதிவிறக்கம் செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை உறுதி செய்யமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு:

உடற்கல்வி ஆசிரியர் வளநூல் (மென் பிரதிகள்)

1. வகுப்பு–01 முதல் 05 வரை–தமிழ் வழி மற்றும் ஆங்கில வழி.
2. வகுப்பு –06 முதல் 10 வரை– தமிழ் வழி மற்றும் ஆங்கில வழி.
3. வகுப்பு–11 முதல் 12 வரை– தமிழ் வழி மற்றும் ஆங்கில வழி.

முதன்மைக் கல்வி அலுவலர்(பொ)
வேலூர்.

பெறுநர்

1. மாவட்டக் கல்வி அலுவலர்
   (தொடக்கக் கல்வி/இடைநிலை/தனியார் பள்ளிகள்)
   வேலூர்.
2. அனைத்து வகை பள்ளி தலைமையாசிரியர்கள்/முதல்வர்கள்
   வேலூர் மாவட்டம்.